தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 5, திருவள்ளுவர் ஆண்டு-2045

2014 ஜூலை 21, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்."

செய்ய வேண்டிய செயல்களைப் பற்றி நன்றாக சிந்தித்து தக்க இடமறிந்து செய்தால் அதில் வெற்றி பெறுவதற்கு மன உறுதி என்னும் துணிவு தவிர வேறு ஒன்றும் வேண்டாம்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 195, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

195—

புதிய பாலம்

***6027—திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, குமராட்சி ஊராட்சி ஒன்றியம், பூலாமேடு—நந்திமங்கலம் கிராமங்களுக்கு இடையில் உப்பனாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 21

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, குமராட்சி ஊராட்சி ஒன்றியம், பூலாமேடு—நந்திமங்கலம் கிராமங்களுக்கிடையில் பழைய கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, தொழில்நுட்பக் குழுவின் ஒப்புதல் பெறுவதற்கு நடவடிக்கையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூலாமேடு—நந்திமங்கலம் கிராமங்களுக்கிடையில் பழைய கொள்ளிடம் ஆற்றுப் பகுதியில் ஏறக்குறைய 25 கிராமங்களுக்கு மேலே போக்குவரத்திற்கு வழிவகை செய்யக்கூடிய அந்தப் பாலத்தைக் கட்டித் தரவேண்டும் என்பது அந்த மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும். இந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுத்தால், குமராட்சிக்கு பத்து நிமிட பயண நேரத்தில் போய்ச் சேர்ந்துவிட முடியும். ஆண்டிற்கு பத்து மாதங்களுக்குமேல் தண்ணீர் வரக்கூடிய இந்த ஆற்றில் பாலம் இல்லாததால் மக்கள் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் செல்ல முடியாமல் அவதிப்படுகிறார்கள். எனவே, இந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கக்கூடிய அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த ஆண்டே அந்தப் பணியைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது, பூலாமேடு-நந்திமங்கலம், ஆகிய கிராமங்களை இணைக்கும்வகையில் பழைய கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே*

2014 ஜூலை 21]

அமைக்க வேண்டிய பாலமாகும். இப்பாலம் அமையவுள்ள சாலை குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளது. 2013—2014 ஆம் நிதியாண்டில் நபார்டு வங்கித் திட்டத்தின்கீழ் ரூ.610 இலட்சத்தில் பாலம் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, தொழில்நுட்பக் குழுவின் ஒப்புதல் பெறுவதற்காக நடவடிக்கையில் உள்ளது. ஒப்புதல் பெறப்பட்டவுடன், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பாலம் கட்டும் பணி தொடங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.610 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது என்றும் அந்தப் பணி உடனடியாகத் தொடங்கப்படும் என்றும் அறிவித்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோல, கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின்படி, அம்புபூட்டியப்பாளையத்தையும், கிள்ளை பிச்சாவரம் பிரதான சாலையையும் இணைக்கக்கூடிய பாலம் மற்றும் நடராஜபுரம்—வீரன்கோவில்திட்டு பகுதிகளை இணைக்கக்கூடிய பாலம் ஆகியவை கட்டப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பினை நிறைவேற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே இரண்டு இடங்களைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். இரண்டு இடங்களையும் ஆய்வு செய்து, எதிர்காலத்தில் நிதி நிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத்

தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருந்த பூவாலை—குண்டியாமல்லூர் என்ற சாலையில் குண்டியாமல்லூர் என்ற இடத்தில் வாய்க்கால்மீது தற்போதுள்ள தாம்போகிக்குப் பதில் புதிய உயர் மட்டப் பாலம் ரூ.270 இலட்சத்தில் கட்டுவதற்கான பணி மாண்புமிகு அம்மா அவர்களின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த புதன்கிழமையன்று நடந்த நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின் போது பட்டுக்கோட்டை பை—பாஸ் திட்டத்திற்கு ரூ.16 கோடி ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதற்காக பட்டுக்கோட்டை தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி சாலையில் இருக்கின்ற ஓவாச்சேரி, தோட்டம் ஆகிய ஊராட்சிகளை இணைக்கக்கூடிய முள்ளியாற்றில் ஒரு பழைய பாலம், வண்டிப்பாலமாக இருக்கின்றது. அவசரக் காலங்களில் அந்த வழியே செல்ல முடியாத சூழல் இருக்கின்ற காரணத்தினால், ஒரு புதிய பாலம் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழைய பாலத்திற்குப் பதில் புதிய பாலம் ஒன்று அங்கே கட்டித்*

2014 ஜூலை 21]

தரப்படுமா எனக் கேட்டுள்ளார்கள். ஒவ்வோர் ஆண்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு படிப்படியாக மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையினை ஏற்று நிதிகளை ஒதுக்கீடு செய்து, பாலங்களைக் கட்டி வருகின்றது.

அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் பகுதியில் போக்குவரத்து செறிவினைக் கருத்தில்கொண்டு அதனை ஆய்வுசெய்து, அந்த ஆய்வின் அடிப்படையில், நிதிநிலைமைக்கேற்ப புதிய பாலம் கட்ட பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனிதப் பொற்பாதங்களை வணங்குகிறேன். எங்களுடைய சீர்காழி தொகுதி தாண்டான்குளம் ஊராட்சி கொட்டாயமேடு மீனவ கிராமத்திற்குச் செல்லும் வழியில் பக்கிங்காம் கால்வாய் குறுக்கே தரைப் பாலம் தற்போது உள்ளது. மழைக் காலங்களில் கொட்டாயமேடு மீனவ மக்கள் அந்த ஆற்றைக் கடந்து செல்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள். எனவே நெடுஞ்சாலைத் துறையின்மூலம் நிரந்தர பாலம் ஒன்று கட்ட மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பக்கிங்காம் ஆற்றின் குறுக்கே ஏற்கெனவே தரைப் பாலம் ஒன்று இருப்பதாக இங்கே சுட்டிக்காட்டியுள்ளார்கள். மழைக் காலங்களில் ஆற்றைக் கடந்து போவதற்கு சிரமம் ஏற்படுவதாகக் குறிப்பிட்டு, தரைப் பாலத்தை மாற்றி புதிய உயர்மட்ட பாலம் ஒன்று கட்டித் தர வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார். எனவே, அதனை ஆய்வுசெய்து நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டுசென்று*

பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேரணாம்பட்டு ஒன்றியத்தையும் மாதனூர் ஒன்றியத்தையும் இணைக்கின்ற இடத்தில் பழைய ஆற்றுத் தரைப் பாலம் ஒன்று இருக்கின்றது. ஒவ்வொரு நாளைக்கும் குறைந்தபட்சம் 25,000 மக்கள் அந்த வழியைப் பயன்படுத்துகின்றார்கள். ஆகவே, இந்த இரண்டு ஒன்றியங்களையும் இணைக்கின்ற இடத்தில் ஒரு புதிய ஆற்றுத் தரைப் பாலம் அமைத்துத் தருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஒவ்வோர் ஆண்டும் நபார்டு திட்டத்தின்கீழ் ஒரு குறிப்பிட்ட நிதியைப் பெற்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும்விதமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டு வருகின்றது.*

மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்று இந்த மூன்று ஆண்டுக் காலத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் பாலங்கள் கட்டுவதற்காக 642 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி 311 பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பல்வேறு அலகுகளின்கீழ் இதுவரை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 950 சிறு மற்றும் பெரிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியைப் பற்றி இங்கே சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். எனவே, நிதிநிலைமைகேற்ப அதனை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.